# அறிவித்தல்

## 2026 ஆம் ஆண்டுக்கான நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்தல்

வடமாகாண சபைக்கு உட்பட்ட ஐந்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள அரச அலுவலகங்களுக்கு 2026 ஆம் ஆண்டிற்குத் தேவையான வேலைகள், 39 வகையான பொருட்கள், 26 வகையான சேவைகள் மற்றும் 14 வகையான கட்டிடப் பொருட்களை வழங்குவதற்கு நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களாக பதிவு செய்யப்பட்ட வடமாகாணத்திற்கு உட்பட்ட நிறுவனங்களின் பட்டியல் வடமாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இல் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் 2026 தொடக்கம் நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களாக பதிவு செய்வோரது பட்டியல் காலாண்டுக்கு ஒருமுறை வெளியீடு செய்யப்படவுள்ளதால் புதிதாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க விரும்பும் வழங்குநர்கள் மற்றும் நிர்மாணதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை பூரணப்படுத்தி **மாகாண சபை வளாகம், A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்**. எனும் முகவரியில் அமைந்துள்ள **மாகாணத்திறைசேரி** அலுவலகத்தில் சமர்ப்பிக்க முடியும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் ஆவணங்கள் பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் தற்போது நிலுவையில் வைக்கப்பட்டுள்ளது. ஆகவே அவ் விண்ணப்பதாரர்கள் தங்கள் ஆவணங்களை முழுமைப்படுத்தி சமர்ப்பிக்கும் பட்சத்தில் காலாண்டு அடிப்படையில் வெளியிடப்படும் திருத்தப்பட்ட வெளியீட்டில் உள்வாங்கப்படும் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

அத்துடன் பெறுகை வழிகாட்டி 3.1.5 இன் பிரகாரம் 03 தடவைகளுக்கு மேல் விலைமனு சமர்ப்பிக்காத நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

பிரதம செயலாளர்,
வட மாகாண சபை,
மாகாணசபை வளாகம்,
A9 வீதி, கைதடி,
யாழ்ப்பாணம்.